தமிழ்நாடு வனத்துறை

அனுப்புநர்
திரு.M. ஆனந்குமார் M.Sc.,
மாவட்ட வன அலுவலர், (கூ.பொ),
புதுக்கோட்டை 622 004.
மின் அஞ்சல்: dfopdkt@gmail.com

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
(துறைத் தலைவர்)
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை — 600 015

உரிய வழிமுறையாக

தலைமை வனப்பாதுகாவலர்,
திருச்சிராப்பள்ளி மண்டலம்,
திருச்சிராப்பள்ளி — 23

ந.க.எண் 4336 / 2019 / வ நாள் .10.2020

அய்யா,

பொருள் : வனம் - புதுக்கோட்டை வனக்கோட்டம் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் - புதுக்கோட்டை நரிமேடு பகுதியில் அமைந்துள்ள குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் கொண்டு செல்லுதல் - புதுக்கோட்டை கஸ்பா மேற்கு காப்புக்காட்டின் வழியாக குடிநீர் குழாய் கொண்டு செல்ல அனுமதி வேண்டுவது — தொடர்பாக

பார்வை :

1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (வனத்துறை தலைவர்), சென்னை ந.க.எண் TS4/30910/2020 நாள் 09.09.2020
2. Online Application uploaded by the User Agency- The Assistant Engineer. TWAD Board. Pudukkottai Dated 02.09.2020 (FP/TN/Water / 49039/2020
3. நிர்வாக பொறியாளர், (TWAD) புதுக்கோட்டை எண் 3-1/F-TNSCB-WS/JDO/Proj.Dn/Pdkt/2020 நாள் 23.09.2020

-----

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தாலுகா, வாகவாசல் கிராமம், புதுக்கோட்டை கஸ்பா மேற்கு காப்புக்காடு 852.97 ஹெக்டேரில் அரசு அறிவிக்கையில் அரசு கடித எண் 3 சுற்றுச்சூழல் மற்றும் வனம் துறை நாள் 06.01.2010-ல் வழங்கியுள்ள வழியுரிமம் எண் V-ன் படி, 1907.200 மீட்டர் நீளம் மற்றும் 100 லிங்குகள் அகலமும், புதுக்கோட்டையிலிருந்து அண்டக்குளம் வனப்பகுதி வழியாக செல்லும் பக்கா நெடுஞ்சாலைக்கு வழங்கப்பட்ட சாலையின் வழியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் குழாய் பதிக்க அனுமதி கோரி பெறப்பட்ட கோரிக்கை மனுவின் தொடர்ச்சியாக, மேற்படி சாலையினை 06.10.2020 அன்று பார்வையிடப்பட்டது. குடிநீர் குழாய் பதிக்க அனுமதி கோரப்பட்டுள்ள இடம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட வழித்தடம் மூலம் புதுக்கோட்டையிலிருந்து அண்டக்குளம் வனப்பகுதி வழியாக செல்லும் பக்கா நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள இடமாகும். இப்பகுதியில் ஏற்கனவே தார்சாலை உள்ளதால், தற்போது குடிநீர் குழாய் பதிப்பதன் மூலம் வனங்களுக்கோ, வன விலங்குகளுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது. மேலும் குடிநீர் குழாய் பதிப்பதற்காக வெட்டப்படும் கால்வாய் 0.75 மீட்டர் அகலமும் 1.05 மீட்டர் ஆழமும் கொண்டதாக உள்ளதால், இதற்கு அனுமதி வழங்குவதில் ஆட்சேபணை ஏதும் இல்லை. மேலும், இந்த காப்புக்காட்டில் பெரிய அளவில் வன உயிரினங்கள் ஏதுமில்லை. எனவே குடிநீர் குழாய் பதிக்கப்பட உள்ள வழித்தடம் காப்புக்காட்டில் ஒரு பகுதியின் எல்லையிலேயே வர உள்ளதால், வன உயரினங்களுக்கோ, சுற்றுச்சூழலுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது. எனவே அனுமதிக்கப்பட்ட வழித்தடம் எண் V-ல் 1600 மீட்டர் நீளத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வனப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (Forest Conservation Act ) அனுமதி வழங்க பரிந்துரை செய்யலாம் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட வன அலுவலர்,
புதுக்கோட்டை

இணைப்பு:

1. மாவட்ட வன அலுவலர், களத்தணிக்கை குறிப்பு
2. காப்புக்காடு வரைபடம்.
3. காப்புக்காடு அறிவிக்கை நகல்.
4. வழித்தட வரைபடம்.
5. மாற்றுப்பாதை ஏதுமில்லை என்பதற்கான சான்றிதழ்.
6. வனச்சரக அலுவலரின் அறிக்கை

நகல்: நிர்வாகப் பொறியாளர், (TWAD) புதுக்கோட்டை தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

Scanned by CamScanner